

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், துரைநல்லூர் 110 கி.வோ. துணை மின் நிலையத்தில், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை வழக்கை பணிகளில் ஈடுபட்டிருக்கும் களப்பணியாளர்களிடம் மின் சீரமைப்பு பணிகளில் ஈடுபடும்போது மிகுந்த கவனத்துடனும், உரிய பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தி பணியாற்ற அறிவுறுத்தினார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் . ராஜேஷ் லக்கானி, . சட்டமன்ற உறுப்பினர் . டி.ஜெ.எஸ். கோவிந்தராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் இருந்தனர்.



குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் வங்கக்கடலில் உருவாகியுள்ள மிக்ஜாம் புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநகராட்சி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, அரவிந்த் ரமேஷ், மேயர் வசந்தகுமாரி, மாநகராட்சி கண்காணிப்பு அலுவலர் ஆ.ஜான்லூயிஸ், மண்டல குழுத்தலைவர்கள் வே.கருணாநிதி, எஸ்.இந்திரன், து.காமராஜ், மாநகராட்சி ஆணையாளர் ஆர்.அழகுமீனா, தாம்பரம் மாநகர காவல் துணை ஆணையாளர் பவன்குமார் ரெட்டி, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த்குமார் சிங், மண்டல குழு தலைவர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் தயார் நிலையில் மழை முன்னேற்பாட்டுப் பணிகள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தகவல்!

திருவாரூர்,டிச. 4-

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில் வடகிழக்கு பருவ மழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன் ,மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் உடனிருந்தனர்.

அப்போது அமைச்சர் டி ஆர்.பி .ராஜா தெரிவித்ததாவது ,

வடகிழக்கு பருவமழையின்போது இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் மூலமாக வெளியிடப்படும் முன்னெச்சரிக்கை அறிவிப்பு நடவடிக்கைகளை பொதுமக்கள் கவனமாக பின்பற்றவும். மேலும் அதிக மழை பொழிவு உள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மே ற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

திருவாரூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை கட்டுப்பாட்டு அறை 24x7 இயங்கக்கூடிய அளவில் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பொதுமக்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக புகார்கள் தெரிவி க்கப்பட்டு, அதன் வழியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

துணை ஆட்சியர் நிலையிலான அனைத்து வட்டாரங்களுக்கும் ஒரு குழு அளவில் ஒன்பது அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் சரக அளவிலும் 13 கோட்ட அளவிலும் 13 வகையான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் வெள்ளம் பாதிக்கக்கூடிய பகுதிகளாக 176 பகுதிகளில் 41 பகுதிகள் அதிகம் பாதிக்கக்கூடிய பகுதிகளும், 68 பகுதிகள் மிதமான பகுதிகளும், 67 பகுதிகள் குறைவாக பாதிக்கக்கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டு அதில் 200 நிவாரண முகாம்கள் அமைக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தீயணைப்பு துறையினரால் திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 152 மாதிரி ஒத்திகை நிகழ்ச்சிகள் மற்றும் தேசிய பேரிடர் மீட்பு குழு வினரால் இரண்டு நாள் மாதிரி ஒத்திகை பயிற்சி நடத்தப்பட்டது. மேலும் மழைக் காலங்களில் வெளியில் வரும் பாம்புகளை பிடிக்க பாம்பு பிடி வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

மாவட்டத்தில் அரசின் வழிகாட்டுதலின்படி 4500 முதல் நிலை மீட்பாளர்களுக்கு மூன்று கட்டங்களாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. வெள்ளம் பாதிக்கக்கூடிய 176 பகுதிகளில் அமைந்துள்ள நியாய விலை கடைகளுக்கு வெள்ளக்கால அத்தியாவசிய பொருட்கள் ஒரு மாதத்திற்கு தேவையான ஏதுவாக 9499 மெ.டன் அரிசியும், 1254 மெ.டன் சர்க்கரையும், 542 மெ.டன் கோதுமையும் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தாழ்வான பகுதிகளில் 14375 மணல் மூட்டைகளும், 94825 சாக்குகளும் மற்றும் 12710 சவுக்கு மரங்களும் தயார் நிலையில் உள்ளது. கால்நடைகளுக்காக 62 நிவாரண மையங்கள் அமைக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெள்ள நீர் வடிவதற்கு ஏதுவாக பொதுப்பணித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையினரால் 239பணிகள் எடுக்கப்பட்டு 1099.51 கி.மீ நீளத்திற்கு வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு வெள்ளநீர் வடியும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 642 மரம் அறுக்கும் இயந்திரங்கள், 163 ஜே.சி.பி இயந்திரங்கள் தயார் நிலையில் வைக்கபட்டுள்ளது. மீன்வளத்துறை மூலம் 341 படகுகள் தயார் நிலையில் உள்ளது. சுகாதார துறை மற்றும் பொதுசுகாதார துறை மூலம் மழைநீர் தேங்கிய இடங்களில் காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்கள் ஏற்படா வண்ணம் தடுக்க போதிய தடுப்பூசிகள் கையிருப்பு உள்ளது. வடகிழக்கு பருவமழை காலத்திற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

முன்னதாக, காவல் துறையினரால் பேரிடர் கால முன்னெச்சரிக்கையினை தடுக்கும் விதமாக இருப்பில் உள்ள மரம் அறுக்கும் கருவி, மோட்டார் படகு, மிதவை ஆடைகள், தீயணைக்கும் கருவி உள்ளிட்ட பொருட்கள் காட்சியப்படுத்தியதனை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல்ராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். ஜெயக்குமார், மன்னார்குடி நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், திருவாரூர் நகர்மன்ற தலைவர் புவனப்பிரியா செந்தில், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கலைவாணி மோகன், மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## சட்டத்திற்குப் புறம்பான “செல்ஃபி பாயிண்ட்” சுற்றறிக்கை:

# பல்கலைக் கழக மானியக் குழு திரும்பப் பெற வேண்டும்!

## பொதுப்பள்ளிக்கான மாநில மேடையின் பொதுச் செயலாளர் பு.பா. பிரின்ஸ் கஜேந்திரபாபு கண்டனம்!

சென்னை, டிச.4-

சட்டத்திற்குப் புறம்பான செல்ஃபி பாயிண்ட் சுற்றறிக்கையை பல்கலைக் கழக மானியக் குழு திரும்பப்பெற வேண்டும் என பொதுப் பள்ளிக்கான மாநில மேடையின் பொதுச்செயலாளர் பு.பா. கஜேந்திரபாபு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் செல்வாக்கைப் பெருக்கவும், தனி நபர் துதிபாடவும் பல்கலைக்கழக வளாகங்கள் பயன்படக் கூடாது.

டிசம்பர் 1, 2023 தேதியிட்ட பல்கலைக்கழக மானியக் குழு சுற்றறிக்கை பல்கலைக்கழக வளாகங்களில் சுய புகைப்படம் (Selfie Point) எடுத்துக் கொள்ளும் அமைப்பை ஏற்படுத்தக் கோரியுள்ளது.

இந்தியாவின் சமீபத்திய சாதனைகளை (achievements in the recent past) விளக்கி, ஏற்பு அளிக்கப்பட்ட வடிவங்களில் (as per approved designs) மட்டுமே இந்த “செல்ஃபி பாயிண்ட்” அமைக்க வேண்டும் என்ற “கட்டளை” உள்ளடக்கியதாக பல்கலைக்கழக மானியக் குழு சுற்றறிக்கை அமைந்துள்ளது.

அரசின் சாதனைகளை விளக்கும் வகையில் காட்சிப்படுத்தும் ஏற்பாட்டை பல்கலைக்கழகங்கள் செய்ய வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பும் அதிகாரம் எந்தச் சட்டத்தாலும் பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு வழங்கப்படவில்லை.

சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டிய பல்கலைக்கழக மானியக் குழு, சட்டத்திற்குப் புறம்பாக, தனது எல்லைகளைக் கடந்து, ஒன்றிய அரசின் ஆட்சி பொறுப்பில் உள்ள கட்சியின் பரப்புரைப் பணிகளை மேற்கொள்ளும் அமைப்பாக செயல்படுவது மிகவும் ஆபத்தானது.

சமூக மாற்றத்திற்கான, நாட்டின் பன்முக வளர்ச்சிக்கான, மனித குல மேம்பாட்டிற்கான, பூமியையும், பிரபஞ்சத்தையும் பாதுகாப்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளும் கல்விச் செயல்பாட்டிற்கான வளாகமே பல்கலைக்கழகம்.

அரசின் கொள்கைகளை ஆராய்ந்து, பகுத்தும், தொகுத்தும் ஆய்வேடுளை வெளியிடும் தன்னாட்சி அமைப்புதான் பல்கலைக்கழகம்.

அத்தகையப் பல்கலைக்கழங்களை ஒன்றிய அரசின் சாதனைகளை பரப்புகின்ற பணியினைச் செய்யும் அமைப்புகளாக மாற்ற முற்படுவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

அரசின் சாதனைகளை விளக்குவதாக கூறிக் கொண்டு, பிரதமராக இருப்பவருக்கு விளம்பரம் தேடித் தரும் “செல்ஃபி பாயிண்ட்”யை வைக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக் குழு அறிவுறுத்தி சுற்றறிக்கை அனுப்பியுள்ளது பல்கலைக் கழகத்தின் நோக்கத்தையே சிதைக்கும் செயலாகும்.

பல்கலைக்கழகங்களின் கல்வியியல் சுதந்திரம், தன்னாட்சி அதிகாரம் ஆகியவற்றை கேள்விக்குள்ளாக்கும் சூழ்ச்சிகரமான திட்டம்தான் “செல்ஃபி பாயிண்ட்” வைக்கக் கோரும் பல்கலைக்கழக மானியக் குழுவின் சுற்றறிக்கை.

2014 முதல் பல்கலைக்கழக மானியக் குழு படிப்படியாக மானியங்களை நிறுத்தியும், குறைத்தும் வந்துள்ளதைக் குறித்தும், ஒன்றிய அரசால் நிறுத்தப்பட்ட கல்வி உதவித் தொகை, கல்வி ஊக்கத்தொகை குறித்த தகவல்கள் குறித்தும் புள்ளி விவரங்களை பல்கலைக்கழகந்தோறும் மாணவர்கள் வைக்க வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

பல்கலைக்கழக வளாக தேர்தலை ஜனநாயக முறைப்படி நடத்த வேண்டும் என்றும் மாணவர்கள் கோரி வருகின்றனர்.

அரசின் திட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்க வேண்டும் என்று மாணவர்களும், மாணவர் அமைப்பினரும் கோரி வருகின்றனர்.

அரசின் கொள்கைகளை விமர்சிக்க வாய்ப்புகளை மறுப்பது மட்டுமல்லாமல், பல்கலைக்கழக வளாகத்தையே ஒன்றிய அரசின் சாதனைகளை விளம்பரம் செய்யும் மையங்களாக மாற்றுவது மக்களாட்சி மாண்புகளுக்கு எதிரானது.

இத்தாலியில் பாசிஸ்ட் கட்சியின் ஆட்சிக்கு தலைமை வகித்த முசோலினியும், ஜெர்மனியில் நாஜி கட்சி ஆட்சிக்கு தலைமை வகித்த ஹிட்லரும் பல்கலைக்கழகங்களை, ஆய்வாளர்களை தங்களின் உத்தரவிற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினர்.

அத்தகைய கொடுங்கோன்மைக்கு அடிபணிய மறுத்து ஜெர்மனியில் இருந்து வெளியேறினார்கள் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் உள்ளிட்ட அறிவியல் அறிஞர்கள்.

இந்தியாவில் அத்தகைய போக்கு மேலோங்குவதை அனுமதிக்க இயலாது.

ஒன்றிய அரசின் சாதனைகள் என்ற பெயரில் கட்சி அரசியல் செய்யவும், “மோடி” புகழ் பரப்பவும் பல்கலைக்கழக வளாகங்கள் பயன்படுத்தப்பட அனுமதிக்க இயலாது.

ஒரு தனி நபரை, சர்வ வல்லமை படைத்த இரட்சகராக வழிபடும் மக்கள் திரளை (cult) உருவாக்கும் முயற்சியே “செல்ஃபி பாயிண்ட்”.

“நாட்டிற்கு வாழ்நாள் முழுவதும் சேவையாற்றிய பெருமக்களுக்கு நன்றி செலுத்துவதில் தவறில்லை. ஆனால் நன்றியுணர்வுக்கு வரம்புகள் உள்ளன. “(There is nothing wrong in being grateful to great men who have rendered life-long services to the country. But there are limits to gratefulness.) ....”இந்தியாவில், பக்தி அல்லது நாயக (hero worship) வழிபாட்டின் பாதை என்று அழைக்கப்படுவது, அதன் அரசியலில் உலகின் வேறு எந்த நாட்டின் அரசியலிலும் வகிக்கும் பங்கிற்கு நிகரற்ற பங்கை வகிக்கிறது. மதத்தில் பக்தி என்பது ஆன்மாவின் இரட்சிப்புக்கான பாதையாக இருக்கலாம். ஆனால் அரசியலில் பக்தி அல்லது நாயக வழிபாடு என்பது சீரழிவிற்கும் இறுதியில் சர்வாதிகாரத்திற்கும் ஒரு உறுதியான பாதையாகும்” (..in India, Bhakti or what may be called the path of devotion or hero-worship, plays a part in its politics unequalled in magnitude by the part it plays in the politics of any other country in the world. Bhakti in religion may be a road to the salvation of the soul. But in politics, Bhakti or hero-worship is a sure road to degradation and to eventual dictatorship) என்று அரசியல் சாசன நிர்ணய சபை உரையில் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் விடுத்துள்ள எச்சரிக்கையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

டிசம்பர் 1, 2023 தேதியிட்ட “செல்ஃபி பாயிண்ட்” குறித்த பல்கலைக்கழக மானியக் குழு சுற்றறிக்கையை பல்கலைக்கழகங்கள் நிராகரிக்க வேண்டும். சட்டத்திற்கு புறம்பான சுற்றறிக்கையைக் கண்டித்தும், அதைத் திரும்பப் பெற வலியுறுத்தியும் பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றி பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று பொதுப் பள்ளிக்கான மாநில மேடை பல்கலைக்கழகங்களை கோருகிறது.

சமத்துவம் சகோதரத்துவம் சுதந்திரம் என்ற இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விழுமியங்களை உயர்த்திப் பிடித்து, மக்களிடம் இறுதி இறையாண்மை என்ற கோட்பாட்டைக் கொண்ட சமயச்சார்பற்ற ஜனநாயக குடியரசாக இந்தியா இருக்கும் என்பதை அனைவருக்கும் உணர்ந்திடும் வகையில் பல்கலைக்கழக செயல்பாடுகள் அமைவது மட்டுமே பல்கலைக்கழக அமைப்பின் நோக்கம் முழுமையாக நிறைவேற உதவும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# போதைப் பொருள் குற்றவாளிக்கு 10 ஆண்டு கடுங்காவல் தண்டனை - ரூபாய் 1 லட்சம் அபராதம்!

சென்னை, டிச. 4 -

திண்டுக்கல் மாவட்டம் போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு காவல் 21.09.2014 TN 57 L 1639 Hero Honda Splendor இருசக்கர வாகனத்தில் வந்த திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை, தெப்பத்துப்பட்டியை சேர்ந்த, பழனிச்சாமி தேவர் மகன் ரவி என்பவரை சோதனை செய்த போது அவர் ஓட்டி வந்த வாகனத்தில் 23 கிலோ கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு குற்ற எண் 110/2014, 8(c) r/w 200(b) (ii) (C) and 25 NDPS Act 1985 - & மேற்கொள்ளப் பட்டது.

மேற்படி வழக்கில் கடந்த 20.03.2015 அன்று திண்டுக்கல் போதைப் பொருள் வழக்குகள் சிறப்பு நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் 30.11.2023 அன்று மாண்புமிகு நீதிபதி அவர்கள் தனது தீர்ப்பில் இந்த குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை மற்றும் 1 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கின் திறம்பட புலன் விசாரணை செய்து நீதிமன்றத்தில் விசாரணை முடித்து குற்றவாளிக்கு தண்டனை பெற்று தந்த புலன் விசாரணை அதிகாரி மற்றும் ஆளிநர்களை திரு. மகேஷ்குமார் அகர்வால் இ.கா.ப. கூடுதல் காவல் துறை இயக்குநர், குற்றம் மற்றும் அமலாக்கப்பிரிவு அவர்கள் மிகவும் பாராட்டினார்.



சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்தின் கீழ் மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட 56வது ஆரப்பாளையம் பகுதியில் இல்லத்துப் பிள்ளைமார் சங்கம் வைர விழா புட்டு திருக்கண் மண்டபத்தில் சமுதாய வளைகாப்பு விழாவில் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி டி ஆர் பழனிவேல் தியாகராஜன் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளையல் உள்ளிட்ட சீர்வரிசை பொருட்களை வழங்கினார். உடன் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் , மண்டத்தலைவர் பாண்டிச்செல்வி ஆகியோர் உடன் உள்ளனர்.



தி.மு.க. அயலக அணி, சார்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி சிதம்பரம் ந.தியாகராஜன் முன்னிலையில் உளுந்தூர்பேட்டை மு.நசீர் அகமது ஏற்பாட்டில் நடைபெற்றது. இதனை டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி, காணொலி மூலம் தொடங்கி வைத்தனர்



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா ஆகியோர் நேற்று (03.12.2023) கன மழையினால் பாதிக்கப்பட்ட டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஜே. ஜான் எபினேசர், மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.